# பனைமரம்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacadamy.com

# பனைமரம்

## உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacadamy.com

# பனைமரம்

மரங்கள் மனித வாழ்க்கைக்குப் பெரிதும் உதவுகின்றன. சுவாசிப்பதற்குச் சுத்தமான காற்றையும், உண்பதற்குப் பழங்கள் காய்களையும் தருவதோடு நமக்குத் தேவையான பல்வேறு பொருட்கள் செய்யவும் மரங்கள் பயன்படுகின்றன. இயற்கை நமக்களித்த வரங்களுள் ஒன்று பனைமரம். பனைமரம் நீண்டு வளரக்கூடியது.



பனைமரம் புயலைத் தாங்கும் வலிமை பெற்றது. பனைமரத்திற்குக் கிளைகள் இல்லை. இலைகள் விசிறி போல் காணப்படும். இதன் பூக்கள் சிறியதாக இருக்கும். இலைகளை பனைஓலை என்பர்.





பனம் பூ



பனைஓலை

பனைமரம் வளர்ந்து பயன்தர நீண்ட நாட்கள் எடுக்கும். இம்மரத்திலிருந்து கிடைக்கும் அனைத்துப் பாகங்களும் உணவாகவோ, பிற பொருளாகவோ பயன்படுகின்றன.



## உணவுப் பொருள்கள்

## ஓலையினால் செய்யப்பட்ட பொருள்கள்



பனைமரத்திலிருந்து நுங்கு, பதநீர், கருப்பட்டி, பனங்கிழங்கு, பனங்கற்கண்டு, பனம்பழம் போன்ற உணவுப்பொருட்கள் கிடைக்கின்றன.



நுங்கு

பனங்கிழங்கு





கருப்பட்டி



பனம்பழம்

கட்டிடப்பொருள்கள், அலங்காரப்பொருள்கள், வீட்டு உபயோகப் பொருள்கள் போன்றவை பனை மரத்திலிருந்து தயாரிக்கப்படுகின்றன.



கட்டிடப்பொருள்கள்



அலங்காரப் பொருள்கள்



வீட்டுஉபயோகப் பொருள்கள்

பனைஓலை கூரை வேயவும், பனங்கட்டைகள் ஓட்டு வீடுகளுக்கு உத்திரமாகவும் பயன்படுத்தப்படுகிறது.



பனைஓலை(கூரை)




பனங்கட்டைகள்

சாயமேற்றிய பனையோலைகளில் கூடைகள், பெட்டிகள், விசிறிகள், முறம், தட்டு, குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள் போன்றவை செய்யப்படுகின்றன.



கூடைகள்



விசிறிகள்



முறம்

நெகிழியின் பயன்பாட்டைத் தவிர்த்து மக்கள் பனையோலையினால் செய்யப்படும் பொருள்களைப் பயன்படுத்த வேண்டும். பனைமரத்தின் சிறப்பினையும், அருமையினையும் உணர்ந்து அதை வெட்டுவதைத் தடுக்க வேண்டும்.



# பனைமரம்









## உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacadamy.com